**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**க. பொ. த. (சா/தர)ப் பரீட்சை**

**இரண்டாம் தவணை - 2017**

| குடியியற் கல்வி | 62 T | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**பகுதி - I**

**அறிவுறுத்தல் :**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3) , (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளிடியை (×) இடுக.**
- **அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.**

01) நேரடி ஜனநாயக ஆட்சியின் அம்சங்களைக் கொண்டிருந்த கிரேக்க அரசு
(1) எதென்ஸ் (2) கிறீட்
(3) கொறிந் (4) மிலான்

02) இந்தியாவில் கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் குழுவாட்சி முறை நிலவிய ஆரிய குடியேற்றம்
(1) மல்ல (2) கோசலை
(3) வஜ்ஜி (4) காசி

03) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பிற்கமைய தேர்தல் தொகுதிகளைப் பிரிப்பது
(1) உள்ளூராட்சி நிறுவனங்கள்
(2) பாராளுமன்றம்
(3) எல்லை நிர்ணய ஆணைக்குழு
(4) கிராம சபைகள்

04) “வெளித்தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலமை சுதந்திரமாகும்” என சுதந்திரத்திற்கான வரைவிலக்கணத்தினை முன்வைத்தவர்
(1) ஹரலட் ஜே. லக்கி
(2) ஜீ. டி. எச். கோல்
(3) சீலர்
(4) காணர்

05) பாராளுமன்ற ஆட்சிமுறையில் நிறைவேற்றுத் துறையின் உறுப்பினர்கள்
(1) பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள்
(2) ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சர்கள்
(3) பிரதமரும், ஜனாதிபதியும்
(4) பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும்



kalvi.lk

06) அரசின் சட்டம், நீதி, நிர்வாகம் ஆகிய முத்துறை அதிகாரங்களும் ஒரு மத்திய அரசிடம் மையப்படுத்தப்பட்டிருக்கும் ஆட்சி முறை

(1) சனநாயக ஆட்சி
(2) தாராண்மைவாத ஆட்சி
(3) சமஷ்டி ஆட்சி
(4) ஒற்றையாட்சி

07) 1815 ஆம் ஆண்டு பிரித்தானியரால் இலங்கையில் நியமிக்கப்பட்ட மாகாணமட்ட அதிகாரி

(1) ஆளுநர்
(2) றெசிலெண்ட் அதிகாரி
(3) அல்வுமிதார்
(4) கமிக

08) இலங்கையில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டமூலம் நிறுவப்பட்டது

(1) கிராமசபைகள்
(2) கிராமோதய சபைகள்
(3) உள்ளூராட்சி சபைகள்
(4) பிரதேச சபைகள்

09) 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் படி முதலமைச்சர் உட்பட மாகாண சபையொன்றின் அமைச்சர்கள் எண்ணிக்கை

(1) மூன்று பேர்
(2) நான்கு பேர்
(3) ஐந்து பேர்
(4) பத்துப் பேர்

10) 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் 13 ஆம் சீர்திருத்தத்தின்படி மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள நிரல்

(1) நிரல் III (2) நிரல் II (3) நிரல் I (4) நிரல் II, III

11) மாகாணசபை ஒன்றில் மத்திய அரசும் மாகாண சபைகளும் இணைந்து மேற்கொள்ளும் அதிகாரங்களின் எண்ணிக்கை

(1) 30 (2) 32 (3) 35 (4) 36

12) உள்ளூராட்சி மன்றமொன்றின் கொள்கை உருவாக்கம் செய்யும் அலகு

(1) பிரதிநிதிகள் சபை (2) பொதுச்சபை
(3) மேற்சபை (4) கீழ்ச்சபை

13) ஐக்கிய அமெரிக்காவில் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையில் அதிகாரங்களைச் செயற்படுத்துவதில் பிரச்சினைகள் ஏற்படும் போது அதனைத் தீர்த்து வைக்கும் அதிகாரம் உடைய மன்று

(1) உயர் நீதிமன்றம்
(2) பிரதேச நீதிமன்றம்
(3) நீதவான் நீதிமன்றம்
(4) சட்டத்துறையான காங்கிரஸ்



kalvi.lk

14) பொருளாதாரம் ஒன்றின் உற்பத்திக் காரணிகளைப் பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க.

(1) வாடகை, கூலி, வட்டி, இலாபம்

(2) உற்பத்தி, நுகர்வு, மூலதனம், முயற்சி

(3) நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி

(4) வாடகை, முயற்சி, வட்டி, உழைப்பு

15) உற்பத்திக் காரணிகளின் பெரும்பான்மை உரிமையை தனியார்துறை பெற்றிருக்கும் பொருளாதார முறை

(1) கலப்புப் பொருளாதார முறை

(2) சமவுடமைப் பொருளாதார முறை

(3) சந்தைப் பொருளாதார முறை

(4) முதலாளித்துவப் பொருளாதார முறை

16) 1977 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையிலுள்ள பொருளாதாரக் கொள்கை

(1) மூடிய பொருளாதாரக் கொள்கை

(2) சந்தைப் பொருளாதாரக் கொள்கை

(3) திறந்த பொருளாதாரக் கொள்கை

(4) ஏற்றுமதி - இறக்குமதி பொருளாதாரக் கொள்கை

17) தெற்காசிய நாடுகளின் வர்த்தக உடன்படிக்கை

(1) EU (2) NAFTA (3) BIMST-EC (4) SAPTA

18) மோதல் முக்கோணத்தினை அறிமுகப்படுத்தியவர்

(1) சேச்ஸ் (2) ஜொஹானஸ் கல்டுங்

(3) T. B. டெயிலர் (4) A. எல்வூட்

19) இலங்கையின் முதலாவது, (1) இறுதி (22) ஆவது தேர்தல் மாவட்டங்கள் முறையே

(1) கொழும்பு, ஹம்பகா

(2) யாழ்ப்பாணம், திருகோணமலை

(3) கொழும்பு, கேகாலை

(4) காலி, கழுத்துறை

20) மோதலைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய சிறந்த சனநாயக முறை

(1) நடுநிலையாளரினால் முன்வைக்கப்படும் முடிவுகளை ஏற்றுக்கொள்ளச் செய்வது.

(2) தனிநபர்களினது கருத்துக்களைக் கவனத்தில் எடுத்து முடிவு காண்பது.

(3) தனக்கு சார்பானவருக்குச் சாதகமான கருத்துக்களை நடுநிலையாளர் கூறுவது.

(4) மோதுலுடன் தொடர்பற்றவரின் கருத்துக்களைச் செவிமடுத்து தீர்வு காண்பது.

21) அரசு ஒன்றின் உயர் சட்டமூலம்

(1) நீதிமன்றத் தீர்ப்பு

(2) குற்றவியல் சட்டம்

(3) சட்டவல்லுனர்களின் கருத்துக்கள்

(4) அரசியல் யாப்பு



Education கல்வி அධ்‍යාපන
kalvi.lk

22) சர்வதேச சட்டங்கள் மீறப்படும் போது சட்டத்தைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றும் நீதிமன்றங்கள்
(1) சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், சர்வதேச நீதிமன்றம்
(2) சர்வதேச உயர் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்
(4) மேல் நீதிமன்றம், உயர் நீதிமன்றம்

23) 1929 ஆம் ஆண்டு முஸ்லீம்களின் விவாகரத்துத் தொடர்பாக தீர்ப்பளிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்றம்
(1) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(2) காதி நீதிமன்றம்
(3) நீதவான் நீதிமன்றம்
(4) மேல் நீதிமன்றம்

24) இலங்கையின் இறுதியானதும் மீயுயர் மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரமுடையதுமான உயர் நீதிமன்றத்தின் தலைவர்
(1) நீதிபதி (2) பிரதமர்
(3) ஜனாதிபதி (4) பிரதம நீதியரசர்

25) A - வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்த்தல்
B - இலங்கையர் ஒருவர் வெளிநாட்டில் புரிந்த குற்றச் செயல்கள்
C - பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்
D - கடற்பரப்பு குற்றச் செயல் தொடர்பாக நீதி அதிகாரம்
E - மாகாணசபைகளுக்குரிய கட்டளைகளை விதித்தல்
மேல் நீதிமன்றத்தின் நீதி அதிகாரங்களை மட்டும் உள்ளடக்கிய விடையைத் தெரிவு செய்க.
(1) A யும் B யும் (2) B யும் E யும்
(3) B யும் D யும் (4) C யும் A யும்

26) இலங்கையின் நீதிமன்ற நடவடிக்கைகளின் சட்டம் தொடர்பிலான உயர்மட்ட அதிகாரப் பதவிகள் வகிக்கும் மூன்று நபர்கள்
(1) பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், ஜனாதிபதி
(2) பிரதமர், ஜனாதிபதி, சட்டமா அதிபர்
(3) பிரதமர், ஜனாதிபதி, நீதி அமைச்சர்
(4) நீதி அமைச்சர், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர்

27) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் நாயகத்தை நியமிப்பவர்
(1) பிரதமர் (2) ஜனாதிபதி
(3) பிரதம நீதியரசர் (4) சட்டமா அதிபர்

28) 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை
(1) 12 (2) 15 (3) 20 (4) 25



kalvi.lk

29) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் செயற்பட்ட நிர்வாக அலகுகள்
(1) உத்தர தேசம், கோரளை, பஸ்ஸிம தேசம்
(2) திசாவை, கோரளை, பற்று
(3) இராசரட்டை, மாயரட்டை, மலையரட்டை
(4) திசாவை, பற்று, இராசரட்டை

30) இலங்கையில் தென்மாகாணத்தில் உள்ளடங்கும் மாவட்டங்கள்
(1) காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை
(2) காலி, கண்டி, மாத்தளை
(3) புத்தளம், கேகாலை, களுத்துறை
(4) காலி, களுத்துறை, மாத்தறை

31) சிறுபாண்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக யாப்பின் 29 ஆம் சரத்து சேர்க்கப்பட்ட அரசியல் சீர்திருத்தம்
(1) கோல்புறூக் அரசியல் யாப்பு
(2) டொனமூர் அரசியல் யாப்பு
(3) சோல்பரி அரசியல் யாப்பு
(4) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பு

32) ஐக்கிய நாடுகளின் மனித உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சர்வதேச உடன்படிக்கை
(1) CEDAW (2) ICESCR (3) ICCPR (4) CEDAAW

33) சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம்
(1) 1938 (2) 1955 (3) 1911 (4) 1929

34) இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான பிரதான சட்டம்
(1) 1980 அம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்ட தேசிய சுற்றாடற் சட்டம்
(2) 1980 கடற்பாதுகாப்புச் சட்டம்
(3) 1900 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம்
(4) 1982 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சமுத்திர சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம்

35) 1978 ஆம் ஆண்டு இலங்கையின் இரண்டாம் குடியரசு யாப்பின் 3 ஆவது அத்தியாயத்தின் 10 - 14 உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட விடயம்
(1) சுற்றாடல் பாதுகாப்பு
(2) அடிப்படை உரிமைகள்
(3) விசேடதேவையுடையவர்களின் உரிமைகள்
(4) சிறுவர் உரிமைகள்


kalvi.lk

36) மனிதச் செயற்பாடுகளினால் சுற்றாடல் தொகுதியில் பல விளைவுகள் ஏற்பட்டுள்ளன. அவ்வகையில் 2017 இலங்கையில் ஏற்பட்ட குப்பைமேட்டுச் சரிவு இடம்பெற்ற இடம்

(1) அரணகல (2) ஹில்துமுல்ல

(3) மீத்தெட்டமுல்ல (4) தங்காலை

37) வளிக்கோளத்தில் 99.9% சதவீதத்தினை உள்ளடக்கியுள்ள வாயுக்கள்

(1) நைதரசன், மீதேன், காபனீர் ஒக்சைட்

(2) நைதரசன், ஒட்சிசன், ஆகன்

(3) ஆகன், மீதேன், காபனீர் ஒக்சைட்

(4) காபனீர் ஒக்சைட், நைதரசனொட்சைட், ஆகன்

38) இலங்கையில் வாழும் ஆதிவாசிகள்

(1) வேடுவர் (2) செவ்விந்தியர்

(3) பறங்கியர் (4) பிக்ஸ்மீக்கள்

39) ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி மக்கள் சங்கத்தினை உருவாக்கிய அமைப்பு

(1) ஐக்கிய நாடுகள் சபை

(2) உலக சுகாதார அமையம்

(3) உலக சுற்றாடல் கழகம்

(4) உலக தொழிலாளர் அமையம்

40) மேலேயுள்ள நிரல் I ஆனது இலங்கையின் அரசியல் யாப்பு சீர்திருத்தங்களையும் நிரல் II இல் அதில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் சிலவற்றையும் தருகின்றது.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. டொனமூர் அரசியல் சீர்திருத்தம் | A - நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை |
| 2. 1972 1 ஆம் குடியரசு யாப்பு | B - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் |
| 3. 1978 2 ஆம் குடியரசு யாப்பு | C - பெயரளவு ஜனாதிபதிப் பதவி |
| | D - சட்டவாக்கக் கழகம் |

நிரல் I இன் ஒழுங்குமுறை வரிசைக்கு ஏற்ப நிரல் II ஐ ஒழுங்குபடுத்தும் போது பெறப்படும் சரியான விடை எது?

(1) ABD (2) BAC (3) BCA (4) DBA



kalvi.lk

## பகுதி - I

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

*01)* (i) ஜனநாயகம் தொடர்பான வரைவிலக்கணங்களை முன்வைத்த இருவரைப் பெயரிடுக.

(ii) சனநாயக ஆட்சிமுறையில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காகப் பின்பற்றப்படும் இரண்டு தேர்தல் முறைகளைக் குறிப்பிடுக.

(iii) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பிற்கமைய, தேர்தல் தொகுதிகளைப் பிரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற பிரதான அளவீட்டு நியதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iv) சுவிட்சர்லாந்தின் சமஷ்டிப் பேரவை என்னும் சட்டத்துறையின் இரட்டை மன்றங்களின் பெயர்கள் இரண்டையும் தருக.

(v) ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி இலக்குகள் இரண்டு தருக.

(vi) சர்வதேச சட்டத்துடன் இணைந்த சட்டப் பிரிவுகள் இரண்டு குறிப்பிடுக.

(vii) இலங்கையில் பொதுச் சட்டத்திற்கு மேலதிகமாகச் செயற்படும் இரண்டு சட்டமுறைகளைத் தருக.

(viii) சட்டமா அதிபரின் கீழ் அவருக்கு உதவியாகச் செயற்படும் அதிகாரிகள் இருவரைத் தருக.

(ix) *1978* ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் பிரகாரம் ஓம்புட்ஸ்மன் பதவி அறிமுகப்படுத்தப்பட்டது. அவரது பிரதான செயற்பாடுகள் இரண்டினையும் தருக.

(x) கனிய வளங்களை அகழும் போது கற்கோள சூழல் தொகுதிக்கு ஏற்படும் பாதிப்புகள் இரண்டு தருக.

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

*02)* (i) பண்டைய காலம் தொடக்கம் உலகில் மேற்கொள்ளப்பட்டுவந்த ஆட்சி முறைகள் இரண்டு தருக. (2புள்ளி)

(ii) நேரடி சனநாயக ஆட்சிமுறையினை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் மூன்று குறிப்பிடுக. (3புள்ளி)

(iii) அ) அரசியல் கட்சிமுறையின் இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக. (2புள்ளி)

ஆ) தேர்தல் தொகுதிகள் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் நன்மைகள் மூன்று தருக. (3புள்ளி)

*03)* (i) தற்கால தேசிய அரசுகளாகக் காணப்படும் அரசுகளின் மூலக்கூறுகள் நான்கு தருக. (2புள்ளி)

(ii) இங்கிலாந்து, பிரான்ஸ், ஒல்லாந்து, போர்த்துக்கல் போன்ற நாடுகளின் தேசிய அரசுகள் எழுச்சி பெறுவதில் பங்களித்த காரணிகள் மூன்று குறிப்பிடுக. (3புள்ளி)

(iii) அ) அரசாங்கத்தின் முக்கிய மூன்று கூறுகளைத் தருக. (2புள்ளி)

ஆ) அதில் ஒன்றின் செயற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (3புள்ளி)



kalvi.lk

04) (i) நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்ற நான்கு துறைகளைத் தருக. (2புள்ளி)

(ii) உலகமயமாதலின் பண்புகள் மூன்று தருக. (3புள்ளி)

(iii) உலகமயமாதல் இலங்கை மீது ஏற்படுத்தியுள்ள விளைவுகளை மூன்று காரணியின் அடிப்படையில் விளக்குக. (5புள்ளி)

05) (i) மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் நான்கு தருக. (2புள்ளி)

(ii) மோதல் தீர்வுக்குப் பயன்படுத்தப்படும் கலந்துரையாடல் நுட்பமுறையின் பண்புகள் மூன்று தருக. (3புள்ளி)

(iii) மோதல் தீர்வு தொடர்பாக பிரசை ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக (5புள்ளி)

06) (i) சட்டம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் மூலாதாரங்கள் இரண்டு தருக. (2புள்ளி)

(ii) இலங்கையில் செயற்படும் நீதிமன்றத் தொகுதிகள் மூன்று தருக. (3புள்ளி)

(iii) அதில் ஒன்றின் பண்புகள் தொடர்பாக விளக்குக. (5புள்ளி)

07) (i) மனிதன் தனது உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாக முக்கியம் பெறுகின்ற வரலாற்று ரீதியான இரண்டு சந்தர்ப்பங்களைத் தருக. (2புள்ளி)

(ii) மனித உரிமையின் குடியியல் அரசியல் உரிமைகள், பொருளாதார சமூக கலாசார உரிமைகள் மூன்று தருக. (3புள்ளி)

(iii) சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (5புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk